# செயலாற்றுகை அறிக்கை - 2019

அபிவிருத்தி நிதித் திணைக்களம்

**2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை**

**நிறுவனத்தின் பெயர்: அபிவிருத்தி நிதித் திணைக்களம்**

**செலவினத் தலைப்பு:** ***243***

**உள்ளடக்கம்**


1. அத்தியாயம் 01-நிறுவனத்தின் விவரம் /நிறைவேற்றுப் பொழிப்பு
2. அத்தியாயம் *02* – முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்
3. அத்தியாயம் *03.* – வருடத்திற்கான ஒட்டு மொத்த நிதிச் செயலாற்றுகை
4. அத்தியாயம் *04* – செயலாற்றுகை சுட்டிகள்
5. அத்தியாயம் *05* – பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை *(SDG)* அடையும் செயலாற்றுகை
6. அத்தியாயம் *06* –மனித வள விபரம்
7. அத்தியாயம் *07*– இணக்க அறிக்கை

# அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

## 1.1. அறிமுகம்

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் அபிவிருத்தி மற்றும் நுண்நிதித் துறையை முன்னேற்றுவதை நோக்காகக் கொண்டு 2005ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதி இத்திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டது. இத்திணைக்களம் பதவிநிலை உத்தியோகத்தர் 18 உள்ளடங்கலாக மொத்தமாக 46 ஆளணியினரைக் கொண்டுள்ளது. இத்திணைக்களத்தின் பிரதான நடவடிக்கைகள் கீழே குறிப்பிடப்படுள்ளவாறு நான்கு பிரிவுகளாகக் காட்ட முடியும்.

### 1. ஆரம்பத் துறை அபிவிருத்தி

அரசின் அபிவிருத்தி மானிய நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், ஆரம்பத்துறை பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துதல் மற்றும் வளர்ந்து வரும் துறைகளுக்கு பொருத்தமான கொள்கைகளை தயாரித்தல்

### 2. நுண்நிதித்துறை அபிவிருத்தி

கடந்த பல தசாப்தங்களாக வறுமையொழிப்புக்காக உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட அணுகுமுறையான நிதியீட்டம் இலங்கையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டது. இலங்கையில் நாடளாவிய ரீதியில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் கிராமிய மட்டத்தில் வணிக வங்கிகளினதும், அரச சார்பற்ற நிறுவனங்களினதும் செயற்பாடுகள் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. நுண்நிதிக்கடன் நடுத்தர வருமானம் பெறும் குடும்பத்தினரது வருவாயை உயர்த்தவும், குறைவருமானம் பெறும் குடும்பத்தினரது நுகர்வுச் செலவுக்குதவவும், அவர்களது சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்கும், அனைத்து பிரசைகளினதும் நுகர்வை அதிகரிப்பதற்கும் மற்றும் பெண்களின் சமூக, பொருளாதார மட்டங்களை அதிகரிப்பதற்கும் பேருதவி புரிகிறது.

### 3. சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் அபிவிருத்தி

இலங்கை அரசின் ஒட்டு மொத்த கொள்கைச் சட்டகத்தினுள் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் பிரிவு, பிரதான வியூகப்பகுதியாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இத்துறைகள் பொருளாதார அபிவிருத்தி, பிரதேச அபிவிருத்தி, வேலைவாய்ப்பு, மற்றும் வறுமையொழிப்பு என்பனவற்றிற்கு பெரும் பங்களிப்பினைச் செலுத்துகின்றன. சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறை இலங்கைப் மொத்த தொழில்முயற்சிகளில் 75% மும், வேலைவாய்ப்பில் 45% மும், மொத்தஉள்நாட்டு உற்பத்தியில் 52% மும் பங்களிப்புச் செலுத்துகின்றது.

### 4. அபிவிருத்தி நிதி பற்றிய உபாயத் திட்டமிடல்

மேலதிக அறுவடை முகாமைத்துவம் செய்யப்பட்டு சிறிய மற்றும் நடுத்தர அளவு விவசாயிகள் ஏனைய சந்தைக் காரணிகளின்பால் கவனத்தைச் செலுத்தி கேள்வி நிரம்பல் காரணிகளில் சமநிலையை ஏற்படுத்துதல். தேசிய பொருளாதார அபிவிருத்திச் செயன்முறைக்கு பெறுமதியான பங்களிப்பைச் செலுத்தி சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களை ஊக்குவித்து புதிய தொழில்முயற்சியாளர்களை அடையாளங் காண்பதை நோக்காகக் கொண்டு திணைக்களத்தின் பங்களிப்புடன் சலுகைக்கடன்கள், திறைசேரிப் பிணை, மற்றும் தொழிநுட்ப உதவி உட்பட அரசின் பல்வேறு சலுகைகளை வழங்குதலானது மேற்கொள்ளப்படுகின்றன.

*1.2* நிறுவனத்தின் தூர நோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்


- **தூரநோக்கு :**
அபிவிருத்தி நிதி தொடர்பில் தேவையான சலுகைகளை வழங்கும் அரசாங்கத்தின் அனுசரணையாளராக செயற்படல்

- **பணிக்கூற்று :**
உரிய அனுசரணையாளர்களின் பங்குபற்றுதல்களுடன் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் அபிவிருத்திக்கு தேவையான நிதியளித்தல் மற்றும் ஆரம்ப விவசாயப் பிரிவு மற்றும் ஏனைய பிரிவுகளுக்குரிய நிதி வசதியளித்தல் மற்றும் அதற்குரிய கொள்கை தந்திரோபாயங்கள் நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றவற்றை உருவாக்குதல் மற்றும் அதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.

## 1.3 பிரதான செயற்பாடுகள்

- சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சிகள் பிரிவுகளின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு தேவையான கொள்கை தந்திரோபாயங்கள் நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குதலும் அதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல்
- சந்தைத் தரவுகளை ஆய்வு செய்து சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் வளர்ச்சியைப் பாதிக்கும் பிரதான பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றுக்காக திறமையான தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பது.
- பொருளாதார அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு அரசினால் அமுல்படுத்தப்படும் மானியத் திட்டங்களின் முன்னேற்ற ஆய்வு மற்றும் அதற்குத் தேவையான கொள்கைகளை வகுத்தலுக்கான வசதிகளை வழங்குதல்
- சந்தைத் தேவைகளுக்கேற்ப வங்கி காப்புறுதி சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மற்றும் நிதி தொழில்முயற்சிகள் பிரிவு நிதிப்பிரிவுகளுக்கான சட்டங்களை உருவாக்குதலும் அவற்றிற்குத் தேவையான வசதிகளை வழங்குதலும்
- சிறிய மற்றும் நடுத்தர விவசாய தொழில்முயற்சிப்பிரிவு வங்கி பணச்சந்தை மற்றும் ஏனைய பிரிவுகளுக்குரிய அரசின் வருடாந்த வரவு செலவுத்திட்டம் தயாரித்தலுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல்
- சிறிய மற்றும் நடுத்தர நிதித்துறை தொழில்முயற்சிப் பிரிவு ஆரம்ப விவசாயப் பிரிவு மற்றும் ஏனைய பிரிவுகளுக்குரிய வரவு செலவுத்திட்டப் பிரேரணைகளை நடைமுறைக்கிடுதல்
- சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியுடன் தொடர்புடைய விவசாய தொழில்நுட்ப மற்றும் சேவைத்துறை தொடர்பான புள்ளி விபரங்களைச் சேகரித்து அவற்றை ஆய்வுசெய்து காணப்படும் தடைகளைக் கண்டறிந்து கொள்கையளவில் தலையிட்டுத் தீர்த்து வைப்பது.
- அரச ஆதரவில் அமுல்படுத்தப்படும் வெளிநாட்டு சலுகைத் திட்டங்களைக் கண்டறிவது.
- அரச கொள்கைகளுக்கிணங்க சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிப் பிரிவின் அபிவிருத்திக்கான கருத்திட்டங்களுக்காக தேசிய வங்கி மற்றும் நிதி வசதிகளை வழங்குதல் .

1.4. நிறுவன விளக்கப்படம்




பி.ப. - பிரதிப் பணிப்பாளர்
உ.ப. - உதவிப் பணிப்பாளர்
த.உத். - தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப உத்தியோகத்தர்
அ.உ. - அபிவிருத்தி உத்தியோகத்தர்
த.உ. - தகவல் மற்றும் தொடர்புசாதன தொழில்நுட்ப உதவியாளர்
பொ.மு. - முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்
மு.உ. - முகாமைத்துவ உதவியாளர்
சா. - சாரதி
கா.உ. - காரியாலய தொழில் உதவியாளர்

**1.5 அமைச்சின் கீழ் செயற்படும் திணைக்களங்கள் /திணைக்களத்தின் பிரதான பிரிவுகள் /மாவட்டச்**

**செயலகத்தின் பிரதேச செயலகங்கள்**

1. ஆரம்ப துறை அபிவிருத்தி
2. நுண்நிதித்தறை அபிவிருத்தி
3. சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறை அபிவிருத்தி
4. அபிவிருத்தி நிதி பற்றிய உபாயத் திட்டமிடல்

1.6 அமைச்சு /*திணைக்களம்* பிரதேச செயலகங்களின் கீழுள்ள நிதி

1.7. வெளி நாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம் (இருப்பின்)

| **கருத்திட்டத்தின் பெயர்** | **நிதி வழங்கும் நிறுவனம்** | **கருத்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட செலவு (ரூ. மில்லியன்)** | **கருத்திட்டத்தின் கால அளவு** |
|---|---|---|---|
| சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் கடன் வரிசை நிகழ்ச்சத் திட்டம் | ஆசிய அபிவிருத்தி வங்கி | 29,911 | 2016-2020 |
| கூரைமீது பொருத்தப்படும் சூரிய மின்சக்தி உருவாக்க கடன் வரிசை நிகழ்ச்சித் திட்டம் | | 7,214 | 2019-2022 |

**அத்தியாயம் 02 - முன்னேற்ற மற்றும் எதிர்கால கண்ணோட்டம்**

1 நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகக் கருதப்படும் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் உற்பத்திப் பொருளாதாரமொன்றை நோக்கி நகர்வதில் பெரும் பங்கை வகிப்பதனால் அவை நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இனங்காணப்பட்டுள்ளன. மேலும், பேரண்டப் பொருளாதார இலக்குகளை அடைவதற்காக அதாவது, மொத்தத் தேசிய உற்பத்தியை அதிகரித்தல், தனி நபர் வருமானத்தினை அதிகரித்தல், வேலையின்மையைக் குறைத்தல், மற்றும் உறுதியான பொருளாதாரமொன்றினை பேணுவதாயின் நுண் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் அவற்றின் பூரண இயலளவுடன் செயற்படல் வேண்டும். நுண் ,சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான நிதிக்கான அணுகலானது தீராத ஒரு ஒரு பிரச்சினையாக இருப்பதனால், வர்த்தகச் சூழலொன்றை உருவாக்குவதற்கு சிறந்த நிதிக்கான அணுகலை விரிவடையச் செய்வதோடு. முறையான வங்கி நடைமுறைகள் மரபு ரீதியான வங்கி நடைமுறைகளிலிருந்து அபிவிருத்தி வங்கி நடைமுறைகளுக்கு நகர்த்தப்படல் வேண்டும்.

2. நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான சிறந்த நிதி அணுகலை விரிவடையச் செய்வதற்கு இத்திணைக்களம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் கடன் வரிசைக் நிகழ்ச்சித் திட்டம், கூரை மீது பொருத்தப்படும் சூரிய சக்தி உருவாக்க கடன்வரிசை நிகழ்ச்சித் திட்டம் மற்றும் உள்நாட்டு நிதியினைப் பயன்படுத்துவதன் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட 17 வட்டி மானியத் திட்டங்களை உள்ளடக்கிய “என்டர்பிரைஸ் ஸ்ரீ லங்கா” நிகழ்ச்சித் திட்டம் போன்ற பல மீள் நிதி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் வட்டி மானிய நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியது. இத்திட்டங்கள் “விவசாயிகள், இளைஞர்கள், பெண்கள், சுய தொழிலாளார்கள் போன்ற சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் துறையிலுள்ள சகல பிரிவினர்களுக்கும மற்றும் ஏனைய விஷேட இலக்காகக் கெள்ளப்பட்ட விஷேட குழுக்களுக்கும் மரபு ரீதியற்ற கடன் வசதிகளையும் மற்றும் நிதி சார்பற்ற தொழில்நுட்ப உதவிகளையும் வழங்குவதன் மூலம் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தது.

3. ஆயினும், இத்திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் மாத்திரம் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கவும் விருத்தி செய்யவும் முடியாது. எனவே, நாட்டின் நடைமுறையிலிருந்த சிக்கலான வரிக் கொள்கைகள் மற்றும் நெகிழ்வற்ற வங்கி விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள் போன்றவற்றின் காரணமாக பெரும்பாலான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் அவற்றினது இயலளவிலிருந்து பூரணமாக தொழிற்பட முடியாதிருந்ததோடு, வங்குரோத்து நிலைமையையும் அடைந்திருந்தன. இந்தச் சூழ்நிலையை புரிந்து கொண்டதனால், புதிய அரசாங்கத்தினால் கைத்தொழில்துறையை

முன்னோடித் துறையொன்றாக உருவாக்கும் நோக்குடன் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் துறையை மறுசீரமைப்பதற்காக ‘‘நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான சுபீட்சமான நோக்கு’’ எனும் அரசாங்கத்தின் புதிய தேசிய கொள்கை சட்டகத்தின் ஊடாக முன்மொழிவுகளின் தொடர்களை உள்ளடக்கிய நிகழ்ச்சித் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இம்முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தலை ஆரம்பிப்பதன் மூலம் அரசாங்கத்தினால் ˙ வரி நிவாரணப் பொதியொன்று அமுலுக்குக் கொண்டு வரப்பட்டதோடு. வணிகச் சூழலை செயற்பாட்டில் கொண்டு வருவதற்காக எளிய வரிக் கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. ˙ வணிகச் சூழலை செயற்பாட்டில் கொண்டு வருவதில் ஏற்பட்ட வாய்ப்புக்களை அடைந்து கொள்ளும் வகையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் வங்கிகளுடன் அவர்களுக்குள்ள நிதி ரீதியான பிணைப்புக்களுக்கு நிவாரணமொன்றை வழங்கும் நோக்குடன் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளை இலக்காகக் கொண்டு ˙ படுகடன் நிவாரணப் பொதியொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

4. 2019ஆம் ஆண்டில், அரசாங்கம் விவசாயத் துறையில் பாரிய அளவில் முதலிட்டிருந்ததோடு, அவற்றில் பெரும்பாலானவை அரசாங்க உர மானிய நிகழ்ச்சித் திட்டம், தேசிய பயிர் காப்புறுதித் திட்டம், விவசாயிகளின் ஒய்வூதியத் திட்டம், நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டம், போன்ற பாரிய விவசாய ஆரதவு நிகழ்ச்சித்திட்டங்களாகவே இருந்ததோடு, விவசாய சமூகத்திற்கு அதிக பட்ச நன்மைகளை வழங்குவதற்காக ஒரு சில விரிவாக்கல்களுடன் குறிப்பிட்ட பங்கேற்பாளர்களுடன் இணைந்து இத்திணைக்களம் நவீன விவசாய களஞ்சிய நிகழ்ச்சித் திட்டங்களை தொடர்ச்சியாக மேற்கொண்டது. புதிய அரசாங்கத்தின் ஆசீர்வாதத்தடன் அரசாங்கத்தின் பாரிய மானிய நிகழ்ச்சித் திட்டமான உர நிகழ்ச்சித் திட்டம் விவசாயிகளுக்கு மிகச் சிறந்த முறையல் புரியக் கூடிய வகையில் முன்னர் பயன்படுத்தப்பட்ட பழைய செயன்முறையில் மீண்டும் தயாரிக்கப்பட்டது. மேலும், விவசாய சமூகத்திற்கு உண்மையான நன்மைகள் கிடைக்கக் கூடிய வகையில் நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்திலும் மற்றும் பயிர் காப்புறுதித் திட்டத்திலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

5. திணைக்களத்தினால் மக்களின் வாழ்க்கைச் செலவினைக் கட்டுப்படுத்துவதற்கான வசதிகள் வழங்குனராக நடவடிக்கைகளை மேற்கொண்டதோடு, நாட்டில் உணவுப் பாதுகாப்பினை ஏற்படுத்துவதற்காக பல்வேறு வகையான செயன்முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டதோடு, அதிக பட்ச சில்லறை விலை, உணவு வகைகளின் கிடைப்பனவை அதிகரித்தல், மற்றும் வரி முறைமையில் மாற்றங்களை கொண்டு வரல் ஆகிய நடவடிக்கைகள் 2019ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன. அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட இந்நடவடிக்கைகளுக்கிடையில் உணவுப் பொருட்களின் கிடைப்பனவு,

சந்தைக்குள் எந்த விதப் பற்றாக்குறைகளுமின்றி மேற்கொள்ளப்பட்டதோடு, அரிசி கிடைப்பனவு தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டது.

6. மேலும், திறைசேரியின் ஏனைய திணைக்களங்களுடன் ஒப்பிடுகையில் இத்திணைக்களத்தினால் அரசாங்கத்தின் சலுகை அடிப்படையிலான பல நிகழ்ச்சித்திட்டங்கள் பல நடைமுறைப்படுத்தப்படுவதனால். வருடாந்தம் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அமைச்சிற்கு ஒதுக்கீடு செய்யப்படும் ஒதுக்கீட்டில் குறிப்பிடத்தக்க அளவிலான தொகை இத்திணைக்களத்தின் ஊடாகவே செலவிடப்படுவதனால், ஒப்பீட்டு ரீதியில் பெருமளவிலான தொழிற்பாடுகள் இத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது.

7. அவ்வாறான விரிவான ஒரு தொழிற்பாட்டிற்கு குறிப்பிடத்தக்க அளவிலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டாலும் கூட, அந்நிதித் தொழிற்பாடுகளை செயற்படுத்தும் போது அங்கீககரிக்கப்பட்ட அரசாங்க நிதிச் சட்ட திட்டங்களையும், மற்றும் செயலாற்றுகை வழிகாட்டல்களுக்குமான உயர் பொருந்துகைகளைப் போலவே, நிதி முகாமைத்துவத்தின் வினைத்திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் நிலையான தன்மையையும் அடிப்படையாகக் கொண்டு கடந்த நான்கு வருடங்களிலும் அரச நிறுவனங்களிலும் நிதி மற்றும் செயற்பாட்டு செயலாற்றுகை பற்றிய மதிப்பீடு தொடர்பாக பதவிக்கு வந்த அரசாங்கத்தின் செயலாற்றுகை மதிப்பீட்டுக் குழுவினால் சிறப்பான செயற்பாட்டிற்காக தங்க விருது கிடைக்கப் பெற்றது.

ஒப்பம்: பீ.அல்கம
பிரதித் திறைசேரிச் செயலாளர்
திறைசேரிச் செயலாளருக்குப் பதிலாக

ஒப்பம்: கீதா விமலவீர
பணிப்பாளர் நாயகம்

*அத்தியாயம் 03 – 2019 டிசம்பர் 31 முடிவுற்ற வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை*

## 3.1 *நிதிச் செயலாற்றகைப் பற்றிய கூற்று*

**ஏசீஏ- எப்**

**2019 டிசம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான**

**நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

ரூ.

| பாதீடு 2019 | | குறிப்பு | உண்மை நிலை | | |
|---|---|---|---|---|---|
| | | | 2019 | 2018 | |
| - | **வருமானப் பெறுகைகள்** | | - | - | ஏசீஏ-1 |
| - | வருமான வரி | 1 | - | - | |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | - | - | |
| - | **வருமானம் அல்லாத பெறுகைகள்** | | - | - | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 4,933,544,993.69 | 2,045,579,007.62 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 1,166,962.92 | 33,073,341.89 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 5,231,299.42 | 1,968,609.92 | ஏசீஏ 5/5(a) |
| - | ஏனைய பெறுகைகள் | | 3,751,112.53 | 22,753,226.64 | |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **4,943,694,368.56** | **2,103,374,186.07** | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | | **4,943,694,368.56** | **2,103,374,186.07** | |
| | **கழி : செலவினம்** | | | | |
| - | **மீண்டுவரும் செலவினம்** | | - | | |
| 40,200,000.00 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 39,333,557.15 | 32,072,618.21 | ஏசிஏ-2 |
| 13,460,000.00 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 11,715,829.13 | 9,100,317.99 | |
| 16,082,938,000.00 | மானியங்கள், கொடைகள மற்றும் மாற்றல்கள் | 7 | 4,086,876,605.41 | 577,350,538.68 | |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | - | - | |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | - | - | |
| 16,136,598,000.00 | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஈ)** | | **4,137,925,991.69** | **618,523,474.88** | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **மூலதனம் செலவினம்** | | | | |
| - | மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும் | **10** | - | 234,211.25 | ஏசிஏ-2(ii) |
| 103,400,000.00 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | **11** | 65,047,479.75 | 511,570,374.51 | |
| 2,110,202,000.00 | மூலதன மாற்றல்கள் | **12** | 1,305,649,880.71 | 1,572,685,278.68 | |
| 10,052,640,000.00 | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | **13** | 8,644,817,366.04 | 9,752,852,106.38 | |
| 2,160,000.00 | மனித வள அபிவிருத்தி | **14** | 1,836,252.64 | 1,163,172.13 | |
| 209,900,000.00 | ஏனைய மூலதனச் செலவினங்கள் | **15** | 7,380,904.42 | 5,614,019.40 | |
| 12,478,302,000.00 | **மொத்த மூலதனம் செலவினம் (உ)** | | **10,024,731,883.56** | **11,844,119,162.35** | |
| | **பிரதான பேரேட்டுச் செலவினம் (ஊ)** | | **21,482,690.16** | **7,558,572.43** | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | 17,121,089.76 | 2,100,149.23 | ஏசிஏ- |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | 4,361,600.40 | 5,458,423.20 | ஏசிஏ-5/5(a) |
| | **மொத்த செலவினம் எ = (ஈ+உ+ஊ)** | | 14,184,140,565.41 | 12,470,201,209.66 | |
| - | **2019 டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி ஏ = (இ-எ)** | | **(9,240,446,196.85)** | **(10,366,827,023.59)** | |

## 3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று

ஏசீஏ-பி

**2019 டிசம்பர் 31ல் உள்ளவாறான**

**நிதி நிலைமைக் கூற்று**

| | குறிப்பு | உண்மை நிலை 2019 ரூபா | 2018 ரூபா |
|---|---|---|---|
| **நிதி சொத்துக்கள் அற்றது** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 1,706,109,588.80 | 1,635,641,050.90 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/ஏசிஏ(5a) | 7,718,268.63 | 8,587,967.65 |
| முடிவுறுத்தப்படாத முற்பணம் | ஏசீஏ-3 | 212,059.09 | |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | | - |
| **மொத்த சொத்துக்கள்** | | **1,713,827,857.43** | **1,644,229,018.55** |
| **தேறிய சொத்துக்கள்/உரிமைப் பங்கு** | | | |
| தேறிய பெறுமதி | | (8,433,919.57) | (23,730,406.48) |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 1,706,109,588.80 | 1,635,641,050.90 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 16,364,247.29 | 32,318,374.13 |
| பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | - |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **1,713,827,857.43** | **1,644,229,018.55** |

பக்க இலக்கம் ஏசீஏ ...1.... முதல் ..6... வரை .5.. முதல் ஏசீஏ .38..வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் .39... முதல் ..52.. வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

........................

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்: எஸ்.ஆர்.ஆடிகல

பதவி : செயலாளர், நிதி பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு

திகதி :

S. R. Attygalle
Secretary to the Treasury and Secretary to the Ministry of Finance, Economy and Policy Development
The Secretariat
Colombo 01

..................

கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்:கீதா விமலவீர

பதவி : பணிப்பாளர் நாயகம்

Geetha Wimalaweera
Director General
Department of Development Finance
Ministry of Finance
The Secretariat
Colombo – 01.

திகதி :

........................................

பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)

பெயர் : டபிளியு.எல்.எம்.ஏ.லியனகே

திகதி :

W. L. M. A. Liyanage
Deputy Director - Finance
Department of Development Finance
Ministry of Finance
Colombo 01

2

## 3.3 காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று

ஏசீஏ- சி

**2019 டிசம்பர் 31ல் உள்ளவாறான**

**நிதி நிலைமைக் கூற்று**

| | உண்மை | |
|---|---|---|
| | **2019** | **2018** |
| | ரூபா | ரூபா |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | - |
| மொத்த வரிப் பெறுகைகள் | - | - |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | - | - |
| இலாபம் | - | - |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | 4,370,106 | 2,068,332,234 |
| ஏனைய தலைப்புப்பளிலிருந்து பெறப்பட்ட வருவாய் | | |
| பெறப்பட்ட முற்பணம் | 4,932,926,000 | |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **4,937,296,106** | **2,068,332,234** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாட்டுக் கொடுப்பனவுகள் | 51,015,906 | 49,024,152 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 4,498,173,819 | 1,541,068,547 |
| ஏனைய தலைப்புகளின் நிதிச் செலவுகள் - | 954,037 | - |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | 215,120,000 | |
| செலுத்தப்பட்ட முற்பணம் | 212,059 | |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **4,765,475,822** | **1,590,092,699** |
| **தொழிற்பாடடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **171,820,284** | **478,239,535** |
| | - | - |
| **முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்** | - | - |
| வட்டி | - | - |
| பங்கு இலாபம் | - | - |
| பௌதீக சொத்துக்களின் சொத்துக்களின் விற்பனை | - | - |
| வழங்கப்பட்ட கடன்கள் மீதான அறவீடுகள் | | - |
| முற்பணத்திலிருந்து பெறப்பட்ட பெறுகைகள் | 2,156,028 | |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | **2,156,028** | **-** |

| | | |
|---|---|---|
| **<u>கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:</u>** | | |
| கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்துக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு | 156,052,670 | 507,806,857 |
| முன்கூட்டிய செலுத்தல்கள் | 1,969,515 | |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **158,022,185** | **507,806,857** |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)** | **(155,866,157)** | **(507,806,857)** |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ-ஊ)** | **15,954,127** | **(29,567,321)** |
| **<u>நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்</u>** | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| வைப்புக்கள் | 1,166,963 | |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | **1,166,963** | **-** |
| ***<u>கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:</u>*** | | |
| உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாடடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வைப்புக் கணக்குகள் மற்றும் ஏனைய பொறுப்புக்களின் மாற்றம் | 17,121,090 | 29,567,321 |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | **17,121,090** | **29,567,321** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)** | **(15,954,127)** | **(29,567,321)** |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) -(ஒ)** | **0** | **-** |
| **ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | **-** | **-** |
| **டிசம்பர் 31ஆம் திகதயிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | **(0)** | **-** |

## 3.4 நிதிக் கூற்றுக் குறிப்புக்கள்

### 1. அறிக்கையிடப்படும் காலப்பகுதி

2019 ஜனவரி மாதம் 01 ஆம் திகதியிலிருந்து டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியானது, இந்நிதிக் கூற்று தொடர்பாக அறிக்கையிடப்படும் காலப்பகுதியாகும்.

### 2. அளவீட்டின் அடிப்படைகள்

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவிற்கு கிட்டிய ரூபாவில் முன் வைக்கப்பட்டுள்ளது.

### 3. வருமானத்தை அடையாளங்காணுதல்

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

### 4. சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மீள்மதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

### 5. சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரண கணககுளுடன் தொடர்புபட்டதாகும்.

### 6. காசு மற்றும் காசுக்கு சமமானவை

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2019 டிசம்பர் 31இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

### *3.5* வருமான சேகரிப்பு செயலாற்றுகை

*ரூபா*,000

| வருமானக் குறியீடு | வருமானக் குறியீட்டின் விபரம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | அசல் மதிப்பீடு | இறுதி மதிப்பீடு | தொகை (ரூபா) | இறுதி வருமான மதிப்பீடு (%) |
| பொருத்தமற்றது | | | | | |

### 3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

*ரூபா ,000*

| ஒதுக்கீட்டு வகை | ஒதுக்கீடு | | உண்மையான செலவினம் | இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு |
|---|---|---|---|---|
| | அசல் ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| மீண்டெழும் | 16,525,500.00 | 16,136,598.00 | 4,137,925.99 | 25.6% |
| மூலதனம் | 11,389,400.00 | 12,478,302.00 | 10,024,731.88 | 80.33% |

### 3.7 .நி.பி குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் /திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம் /மாவட்டச் செயலகம் / மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு

ரூபா,000

| தொடர் இலக்கம் | அமைச்சு /திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு | ஒதுக்கீட்டு நோக்கம் | ஒதுக்கீடு | | *உண்மையான செலவு* | இறுதி ஒதுக்கீட்டின் % ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு |
|---|---|---|---|---|---|---|
| | | | அசல் ஒதுக்கீடு | இறுதி ஒதுக்கீடு | | |
| 1 | நிதி அமைச்சு | என்டர்பிரைஸ் ஶ்ரீ லங்கா அழைப்பு மைய இலக்கம் 1625 இற்கான வருடாந்தக் கொடுப்பனவு | 586.73 | 586.73 | 586.73 | 100% |
| 2 | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு | அபிவிருத்தி அலுவலரின் சம்பளக் கொடுப்பனவுகள் | 400.00 | 400.00 | 368.00 | 92% |

### 3.8 நிதி அல்லாத சொத்துக்களின் அறிக்கையிடல் செயலாற்றுகை

ரூபா, 000

| ஆதன குறியீடு | குறியீட்டு விபரம் | *2019.12.31* ஆந்திகதிய சுற்றாய்வுச் சபை அறிக்கை படி மீதி | ***2019.12.31*** ஆந்திகதிய நிதி நிலைமை அறிக்கை படி மீதி | எதிர் காலத்தில் கணக்கிட வேண்டியது | அறிக்கையிடல் முன்னேற்றம் % |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டடம் மற்றும் கட்டமைப்பு | | *1,667,767.16 | | |
| 9152 | இயந்திரம் மற்றும் உபகரணம் | 38,342.42 | 38,342.42 | | 100 |
| 9153 | காணி | | | | |
| 9154 | அருவமான சொத்துக்கள | | | | |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | | | | |
| 9160 | நடைபெறும் பணிகள் | | | | |
| 9180 | குத்தகை சொத்துக்கள் | | | | |

அநுராதபுரம், மன்னார், இரத்தினபுரி, கிளிநொச்சி மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தானிய பாதுகாப்பு நிலையங்களின் பௌதீக உரிமம் குறிப்பிட்ட மாவட்டச் செயலகங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன.

### 3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

சிங்கள மொழி மூலம் தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை இணைக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் 04 – செயலாற்றுகைச் சுட்டிகள்

### 4.1 நிறுவனத்தின் செயலாற்றச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

| குறியீட்டுச் சுட்டிகள் | எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக *(%)* உண்மையான வெளியீடு | | |
|---|---|---|---|
| | **100%- 90%** | **75%-89%** | **50%- 74%** |
| அபிவிருத்தி நிதித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நுண்நிதி , சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கடன் திட்டம் | 100% | | |
| புதிய தொழில் முயற்சிகளை நடைமுறைப்படுத்தல் | 90% | | |
| பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் | 100% | | |

## அத்தியாயம் 05 – பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை *(SDG)* அடையும் செயலாற்றுகை

### 5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்

| இலக்கு / குறிக்கோள் | அடைவுகள் | குறிகாட்டிகள் | இது வரை அடையப் பெற்ற முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0%-49% | 50%-74% | 75%-100% |
| **இலக்கு 1-** வறுமை இன்மை : எல்லா இடங்களிலும் அனைத்து வடிவங்களிலும் உள்ள வறுமையை ஒழித்தல் | 1.5 வறுமையை ஒழிக்கும் நடவடிக்கைகளில் முதலீடு செய்வதனை துரிதப்படுத்துவதற்கு வறுமையினால் வாடுவோரை முன்னுரிமை அளிக்கும், மற்றும் ஆண் பெண் பால் நிலை உணர்திறன் அபிவிருத்தி உபாயங்கள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச மட்டங்களில் சாத்தியமான கொள்கை கட்டமைப்பினை உருவாக்கல் | 1.ஆ.1. நன்மைகளைப் பெற்றுக் கொள்வதில் பாகுபாடுகளுக்கு உள்ளாகும் பெண்கள், வறியவர்கள் மற்றும் எளிதில் பாதிப்புக்கு உள்ளாகக் கூடிய குழுக்களுக்கான அரசாங்கத்தின் மீண்டெழும் மற்றும் மூலதன செலவினத்தின் தொகை | **கடன்களை பதிவழிக்கும் நிகழ்ச்சித் திட்டம்:**<br>கடன்பட்டோரின் எண்ணிக்கை: 45,139<br>நுண்நிதி நிறுவனங்கள் /நிதிக் கம்பனிகளினால் பதிவழிக்கப்பட்ட வட்டித் தொகை: ரூபா 141.41 மில்லியன் | | |
| **இலக்கு 2,** பசி ஒழிப்பு- நிலைபேறான விவசாயத்தை முன்னிறுத்தி இன்மை, பசியை ஒழித்து, உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தினை மேம்படுத்தல் | 2.4) 2030 ஆம் ஆண்டளவில் நிலைபேறான உணவு உற்பத்தி முறைமைகளை உறுதிப்படுத்தல், உயிரியல் முறைமைகளின் இருப்பினை உறுதிப்படுத்தல் | 2.4.3) உற்பத்தித் திறன் வாய்ந்த மற்றும் நிலைபேறான விவசாயத்தினை மேற்கொள்ளும் விவசாய நிலங்களின் அளவு | **புதிய முழுமையான கிராமிய கடன் திட்டம்**<br>கடன் தொகை : ரூபா 10,370 மில்லியன்<br>பயிரச்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப்பரப்பு (ஏக்கர்) – 1,563,988<br><br>**"ரன் அஸ்வென்ன"** கடன் திட்டம் | | |

| | | | |
|---|---|---|---|
| | உயிரியல் முறைமைகளை பேணுவதற்கு உதவும் காலநிலை மாற்றத்தினை ஏற்கக்கூடிய இயலளவினை வலுப்படுத்தல்.<br>பாதகமான வானிலை, வறட்சி, வெள்ளம், மற்றும் ஏனைய அனர்த்தங்கள், நிலத்தினதும் மற்றும் மண்ணினதும், தரத்தையும் படிப்படியாக விருத்தி செய்யக் கூடியதுமான இயலளவை வலுப்படுத்தல், சுற்றுச் சூழல் முறைமைகளை பேணுவதற்கு உதவும் விவசாய உற்பத்தி நடைமுறைகளை செயற்படுத்துதல். | | கடன்களின் எண்ணிக்கை: 7,970<br>கடன் தொகை : ரூபா 11,469.3 மில்லியன்<br><br>**“கொவி நவோதா” கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை தொகை:1,451<br>கடன் தொகை : ரூபா 682.4 மில்லியன்<br>உயர்வான விலைகளை பின்னர் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் அறுவடைக் காலப்பகுதியில் நெல், சோளம், சோயா அவரை, எள்ள, பயறு, மிளகு, வேர்க்கடலை போன்ற விவசாயிகளின் தானிய உற்பத்திப் பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கு அனுராதபுரம், புத்தல, மன்னார், கிளிநொச்சி, பொலன்னறுவை, மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் 06 களங்சியங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.<br><br>நெல் அகற்றல் நிகழ்ச்சித் திட்டம் 2019 நவம்பர் மாதத்தில் சந்தையில் அரிசிக்கு நிலவிய உயர்வான விலை மற்றும் அரசிப் பற்றாக்குறை என்பனவற்றின் காரணமாக ஏற்றப்பட்ட விலை உயர்வினைக் கட்டுப்படுத்துவதற்காக 26,000 |

| | | | |
|---|---|---|---|
| | | | மெட்ரிக் தொன் அரிசி சதொச மற்றும் பல்பொருள் அங்காடிகளின் ஊடாக விற்பனை செய்வதன் ஊடாக அரிசியின் விலை வீழ்ச்சி அடைந்தது. |
| **இலக்கு 4** தரமான கல்வி: அனைவரும் உள்ளடங்கிய, சமத்துவமான கல்வியையும், வாழ்நாளுக்கான கற்றல் சந்தர்ப்பத்தினையும் உறுதிப்படுத்துதல், | **4.2** 2030ஆம் ஆண்டளவில், சகல பெண் பிள்ளைகளுக்கும் ஆண் பிள்ளைகளுக்கும் தரமான ஆரம்ப குழந்தைப் பருவ வளர்ச்சி, பராமரிப்புச் சேவைகள், மற்றும் முன் ஆரம்பக் கல்விக்கு பிரவேசிப்பதற்கான வாய்ப்பு இருத்தல் மற்றும் அவற்றின் மூலம் அவர்கள் ஆரம்பக் கல்வியை மேற்கொள்வதற்கு தயாராக உள்ளரர்கள் என்பதை உறுதிப்படுத்தல் | 4.2.1. பெண் ஆண் பால் நிலை அடிப்படையில் சுகாதாரம், கல்வி மற்றும் உளவியல் துறைகளில் சிறந்த அபிவிருத்திப் பாதையை நோக்கிப் புறப்படுவதற்கு தயாராக உள்ள 5 வருடங்களுக்குக் குறைந்த சிறுவர்களின் எண்ணிக்கை | **“சிங்கித்தி பாசல” கடன் திட்டம்**<br><br>கடன்களின் எண்ணிக்கை :62<br>கடன் தொகை : ரூபா 63.4 மில்லியன்<br><br>**“ரெக்கவரன” கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை : 9<br>கடன் தொகை : ரூபா 44.4 மில்லியன் |
| | 4.7 . 2030 ஆம் ஆண்டளவில் நிலைபேறான அபிவிருத்தி, நிலைபேறான வாழ்க்கை முறைமைகள், மனித உரிமைகள், பாலின சமத்துவம், சமாதானத்திற்கான கலாச்சாரங்களை மேம்படுத்தல், வன் முறைமைகள் இன்மை, உலகளாவிய | 4.7.1. (i) உலகளாவிய குடியுரிமைக் கல்வி , (ii) பாலின சமத்துவம், மனித உரிமைகள்,<br>(அ) தேசிய கல்விக் கொள்கைகள்,<br>(ஆ) பாட விதானம்,<br>(இ) ஆசிரியர் கல்வி மற்றும்<br>(ஈ) மாணவர்களின் மதிப்பீடு ஆகிய சகல | **“மை பியுசர்” (எனது எதிர்காலம்) கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை : 729<br>கடன் தொகை : ரூபா 650.5 மில்லியன்<br><br>**“எரம்பும” கடன் திட்டம்**<br>**கடன்களின்** எண்ணிக்கை : 175<br>கடன் தொகை : ரூபா 230.99 மில்லியன் |

| | | | |
|---|---|---|---|
| | குடியுரிமை கலாச்சார நெருக்கத்தை மதித்தல், நிலைபேறான அபிவிருத்திக்கு கலாச்சாரப் பங்களிப்பு 2030 | மட்டங்களில் ஒழுங்கு முறைப்படுத்தல் | |
| **இலக்கு 5 :** பால் நிலை சமத்துவத்தை அடைவதுடன் அனைத்து பெண்களையும், சிறுமிகளையும் வலுப்படுத்தல் | 5.1 சகல இடங்களிலும் சகல பெண்களுக்கும், பெண் பிள்ளைகளுக்கும் எதிரான சகல விதமான பாரபட்சங்களையும் இல்லாதொழித்தல் | 5.1.1 பால் நிலை அடிப்படையில் சமத்துவம் மற்றும் பாரபட்சமற்ற நிலைமையை மேம்படுத்தல், வலியுறுத்தல் மற்றும் கண்காணித்தல் தொடர்பான சட்டரீதியான கொள்கைச் சட்டகம் ஒன்று உள்ளதா இல்லையா என்பது தொடர்பாகும். | **வீ - பை பெண்களுக்கான தொழில்முயற்சிகளுக்கான நிதி உதவிக் கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை : 313<br>கடன் தொகை : ரூபா 613.6 |
| **இலக்கு 7** அனைவராலும் பெறக் கூடிய நியாயமான நம்பகத்தன்மை கொண்ட நிலைபேறான மற்றும் நவீன சக்தியினை உறுதி செய்தல். | 7.ஆ. சகல அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலும் விஷேடமாக குறை விருத்தியடைந்த நாடுகள், அபிவிருத்தி அடைந்து வரும் ராஜ்யங்களில் சிறிய தீவுகள், நிலத்தால் முடக்கப்பட்ட அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் அவற்றின் குறிப்பிட்ட ஆதரவளிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஏற்ப, உட்கட்டமைப்பினை விரிவடையச்செய்தல், | 7.ஆ.1 மொத்த உள் நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மின்வலு வினைத்திறனில் முதலீடுகளும், மற்றும் நிலைபேறான அபிவிருத்திச் சேவைகளுக்கான உட்கட்டமைப்பு மற்றும் தொழில்நுட்பத்திற்கான நிதி மாற்றல்களில் வெளிநாட்டு நேரடி முதலீடுகளும் | **"ரிவி பல சவி" கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை – 453<br>கடன் தொகை ரூபா 157.6 மில்லியன்<br><br>கூரை மீது பொருத்தப்படும் சூரிய சக்தியால் உருவாக்கப்படும் சூரிய சக்தி உருவாக்கக் கடன் வரிசைக் கருத்திட்டம்<br><br>கடன்களின் எண்ணிக்கை – 1020<br>கடன்தொகை ரூபா 1749.8 மில்லியன் |

| | | | |
|---|---|---|---|
| | நவீன மற்றும் நிலைபேறான மின் வலு சேவைகளையும் வழங்குதல். | | |
| **இலக்கு8**<br>கௌரவமான மற்றும் ஆக்கத்தினை ஊக்குவிக்கும் வேலைவாய்ப்பினை யும் , எல்லோரையும் உள்ளடக்கிய நிலைபேறான பொருளாதார வளர்ச்சியினையும் முன்னிறுத்தல் | 8.3. உற்பத்தித் திறன் வாய்ந்த நடவடிக்கைகள், ஒழுக்கமான தொழில் வாய்ப்புக்களை உருவாக்கல் , தொழில்முயற்சிகள், புத்துயிராக்கம் மற்றும் , புதிய கண்டு பிடிப்புக்கள், ஆதரவளிக்கும் அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகள், நிதிச் சேவைகளுக்கான அணுகல் உள்ளடங்கலாக நுண் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின் உருவாக்கம் மற்றும் வளர்ச்சியை ஊக்குவித்தல். | 8.3.1. விவசாயமல்லாத துறைகளில் பால் நிலை வாரியான முறைசாரா தொழில் வாய்ப்புக்கள் | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் வரிசைக் கடன் திட்டம்<br><br>கடன்களின் எண்ணிக்கை : 1,011<br>கடன் தொகை :ரூபா 6,807 மில்லியன்<br><br>**“ஜய இசுர” கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை : 1,000<br>கடன் தொகை :ரூபா 21,357 மில்லியன்<br><br>**“பசுமைக் கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை : 242<br>கடன் தொகை :ரூபா 791.5 மில்லியன்<br>**“திரி சவிய”கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை : 572<br>கடன் தொகை :ரூபா 413.3 மில்லியன்<br>**“ரிய சக்தி”**<br>கடன்களின் எண்ணிக்கை : 178<br>கடன் தொகை :ரூபா 613.8 மில்லியன் “<br><br>**“மாத்ய அருண” கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை : 258<br>கடன் தொகை :ரூபா 76.9 மில்லியன்<br>**“சங்சாரக பொட்டோ”** |

| | | | |
|---|---|---|---|
| | | | கடன் திட்டம்<br>கடன்களின் எண்ணிக்கை : 1,198<br>கடன் தொகை :ரூபா 538.46 மில்லியன்<br>**"சிட்டி ரைட்" கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை : 8<br>கடன் தொகை :ரூபா 52.1 மில்லியன் |
| | **8.5** 2030 ஆம் ஆண்டளவில், பூரண மற்றும் இளைய சமுதாயம், மாற்றுத் திறனுடைய நபர்கள், போன்றோர் உள்ளடங்கலாக சகல பெண்களுக்கும் மற்றும் ஆண்களுக்கும் பூரணமாக உற்பத்தித் திறன் வாய்ந்த தொழில் வாய்ப்புக்களையும், ஒழுக்கமான வேலைகளையும் சமனான வேலைக்கு சமனான பெறுமதியைச் செலுத்துதல். | **8.5.1.** தொழில், வயது, மற்றும் மாற்றுத் திறன்களை உடைய நபர்கள் தொடர்பான விடயங்களுடன் ஆண் பெண் பால் நிலை வேலை வாய்ப்புக்களை உடையோரின் ஒரு மணித்தியாலத்திற்கான சராசரி வருமானம் | 6 பிரதேச செயலகங்களுடன இணைந்து ஒரு கம்பனி ஸ்தாபிக்கப்பட்டது. |
| | 8.9 2030 ஆம் ஆண்டளவில் உள்நாட்டுக் கலாச்சாரம், உற்பத்தி மற்றும் வேலை வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கான நிலைபேறான அபிவிருத்தி கைத்தொழில்கள் தொடர்பான | 8.9.2 மொத்த வேலை வாய்ப்புக்களில் ஒரு பிரிவாக சுற்றுலாக் கைத்தொழில்களிலுள்ள பால் நிலை ரீதியான வேலை வாய்ப்புக்களின் எண்ணிக்கை, வேலை வாய்ப்புக்களின் வளர்ச்சி வீதம், | " ஜய இசுர" கடன் திட்டம் : 8,204 வேலைகள்<br><br>ஹோம் ஸ்டே கடன் திட்டம் : 242 வேலைகள்<br><br>சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் கடன் வரிசைத் திட்டம் : குறைந்தது 1,011 வேலைகள் |

| | | | |
|---|---|---|---|
| | கொள்கைகளை திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தலும். | | "சன்சாரக பொட்டோ: கடன் திட்டம் : 1,198 வேலைகள் |
| **இலக்கு 11** நிலையான நகரங்கள் மற்றும் சமூகங்கள்: உள்ளடக்கமான , பாதுகாப்பான உறுதியான மற்றும் நிலைபேறான நகரங்களையும் குடியிருப்புக்களையும் அமைத்தல். | 11. 2030 ஆம் ஆண்டளவில் சகலருக்கும் போதிய, பாதுகாப்பான மற்றும் தாங்கிக் கொள்ளக் கூடிய அளவிலான வீடு மற்றும் அடிப்படைச் சேவைகளுக்கும் மற்றும் மேம்படுத்தப்பட்ட சேரிகளுக்குமான அணுகலை உறுதிப்படுத்தல் | 11.1.1 குடிசைகள், மற்றும் சேரிகளில் வாழும் சகரசனத்தொகையின் பிரிவு, போதிய அளவிலில்லாத வீடுகளில் முறை சாராத முறையில் குடியேறி வாழும் நகரச் சனத்தொகையின் அளவு | **" சொந்துரு பியச" கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை : 14,834<br>கடன் தொகை ரூபா 2,958.3 மில்லியன்<br><br>**"ஹோம் ஸ்வீட் ஹோம்": கடன் திட்டம்**<br>கடன்களின் எண்ணிக்கை : 1,282<br>கடன் தொகை ரூபா 4,585.2 மில்லியன்<br>**"சிஹின மாளிகா"**<br>கடன்களின் எண்ணிக்கை : 247<br>கடன் தொகை ரூபா 1,332.5 மில்லியன் |

### 5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்கள்

இலங்கை அரசாங்கத்தின் முழுமையான கொள்கை சட்டகத்துக்குள் அபிவிருத்தி செயன்முறையில் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் துறைகள் மிக முக்கியமான உபாய ரீதியான துறைகளாக இனங்காணப்பட்டுள்ளன. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடனும், நுண்நிதித் துறைக்கு புத்துயிரளிப்பதற்கும், அரசாங்க பொறிமுறைக்கு பங்களிப்புச் செலுத்தும் நோக்குடன் இத்திணைக்களம் ஸ்தாபிக்கப்பட்டது. கடந்த வருடத்தில் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி பிரதேச அபிவிருத்தி வேலை வாய்ப்புக்களின் உருவாக்கம், மற்றும் வறுமை ஒழிப்பு போன்றவற்றிற்கு குறிப்பிடத்தக்க அளவில் பங்களிப்புச் செலுத்திய பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் அபிவிருத்தி நிதித் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டன. அதன் படி, இத்திணைக்களம் வறட்சியினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் நுண் நிதிக்கடன்களை பதிவழித்தல், வட்டி மானிய கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தல், நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டம், உர மானிய நிகழ்ச்சித் திட்டம், விவசாயிகளின் ஓய்வூதியத் திட்டம், பயிர் காப்புறுதித் திட்டம், பெண்

முயற்சியாளர்களுக்கான நிதி முன்னேற்பாட்டுக் கடன் திட்டம், விவசாயக் களஞ்சியங்களை நிர்மாணித்தல், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிக் கடன் வரிசை திட்டம் (SMELoC), கூரை மீது பொருத்தப்படும் சூரிய சக்தி உருவாக்கக் கடன் வரிசைத் திட்டம் (RSPGLoC) போன்ற பல பொருளாதார உற்பத்தித் திறனான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கவர்ச்சிகரமான நிபந்தனைகள் மற்றும் இலகுவாக பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருத்தல் போன்ற விடயங்களின் காரணமாக கிராமியப் பிரதேசங்களில் மக்கள் தமது நிதித் தேவைகைள நிறைவேற்றுவதற்காக நிதிக் கம்பனிகள் மற்றும் நுண் நிதி நிதி நிறுவனங்களை அணுகுதல் இலகுவான விடயமொன்றாகக் காணப்பட்டது. அக்கடன்களுக்கு அறவிடப்படும் உயர்வான வட்டி வீதம் மற்றும் குறிப்பிட்ட கடன் தொகை உற்பத்தித் திறன் வாய்ந்த பொருளாதார நடவடிக்கைகளில் முதலிடப்படாததனால் இப்பிரதேசங்களில் பெண்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் பலத்த நிதி நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்ததன் பிரதிபலனாக பெற்றுக் கொண்ட கடன்களை செலுத்துவதற்காக மீளக் கடன்களைப் பெற்றுக் கொண்டதன் காரணமாக கடன் பொறிக்குள் சிக்குண்டதனால் அவர்கள் கடும் பொருளாதாரப் பின்னடைவுக்கு உள்ளாகியுள்ளனர். அதன் படி, கடந்த காலங்களில் வறட்சியினால் பாதிக்கப்பட்ட திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், முல்லைத் தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் குருநாகலை, , புத்தளம், அனுராதபுரம், பொலன்னறுவை ஆகிய மாவட்டங்களில் வாழும் பெண்களினால் இலங்கை மத்திய வங்கியின் பதிவு செய்துள்ள நிதிக் கம்பனிகள் மற்றும் நுண்நிதி உத்தியோகத்தர்களின் சங்கங்களில் பதிவு செய்துள்ள நுண் நிதி நிறுவனங்களிலிருந்து பெற்றுக் கொண்ட நுண் நிதிக் கடன்கள் பதிவழிக்கப்பட்டன. இதில், அதிக பட்சம் ரூபா 100,000 நுண் நிதிக் கடன் தொகையில் 2018 ஜுன் மாதம் 30 ஆம் திகதியளவில் குறைந்தது தொடர்ச்சியாக மூன்று மாதங்கள் நிலுவையாக இருந்த கடன் தொகை மீதிகள் மற்றும் நிலுவையாக இருந்த வட்டித் தொகை முறையே ரூபா 1,255 மில்லியன் மற்றும் ரூபா 141 மில்லியன் பதிவழிக்கப்பட்டுள்ளதோடு, அதன் மூலம் 45,139 கடன்பட்டோர் நன்மை அடைந்தனர். திறைசேரியினால் கடன்களைப் பதிவழிப்பதற்கான செலவு ஏற்கப்பட்டது. ஆறு தவணைகளில் செலுத்த வேண்டியிருந்த இம்முதலாவது மற்றும் இரண்டாவது தவணைகளாக ரூபா 420 மில்லியன் 2019 ஆம் ஆண்டிற்குள் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டங்களின் காரணமாக வறட்சியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏதாவது ஒரு நிவாரணம் கிடைக்கப் பெற்றதோடு, மேலும் மக்களை பாதிப்புக்குள்ளாக்குவதன் மூலம் ஒவ்வொரு நிறுவனத்தினதும் விருப்பத்திற்கு ஏற்ப, மாற்றஞ் செய்ய முடியாத அளவுக்கு நிதி வியாபாரச் சட்டம், நிதிக் குத்தகைச் சட்டம் மற்றும் நுண் நிதிச் சட்டம் போன்ற சட்டங்களுக்கு ஏற்ப, செல்வதன் மூலம் நிதிக் கம்பனிகளும், மற்றும் நுண் நிதி நிறுவனங்களினால் வழங்கப்படும் சகல நுண்நிதிக் கடன்களுக்கு அறவிடக் கூடிய அதிக பட்ச வருடாந்த வட்டி வீதம் (வினைத் திறனான வட்டி வீதம்) 35 சதவீதம் ஆக விதிக்கப்பட்டு அதனுடன் தொடர்புடைய வழிகாட்டல்கள் இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்டது

உணவுப் பாதுகாப்பு, சிறந்த போஷாக்கு மட்டமொன்று, நிலைபேறான விவசாய அபிவிருத்தியை அடையும் குறிக்கோளொன்றுடன் பல நிகழ்ச்சித் திடடங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. அந்நிகழ்ச்சித் திட்டங்களுக்குள் உர மானிய நிகழ்ச்சித் திட்டம், நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டம், தானியங்களை களஞ்சியப்படுத்துவதற்கான களஞ்சியங்களை நிர்மாணித்தல், வட்டி மானிய விவசாயக் கடன்கள், பயிர் காப்புறுதி ஆகியன மூலம் விவசாயியை மாத்திரமல்லாமல் நுகர்வோரையும் பாதுகாப்பதன் மூலம் சமனிலையிலான சந்தையொன்றினை பேணுவதற்கு அவசியமான பங்களிப்பு வழங்கப்பட்டது.

விவசாய உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட பல நிகழ்ச்சித் திட்டங்களுக்குள் உர மானிய நிகழ்ச்சித் திட்டம் பிரதான இடத்தைப்பெறுவதற்குக் காரணம் அதன் மூலம் விவசாயிகளின் உற்பத்திச் செலவு குறைந்த மட்டத்தில் பேணக் கூடியதாக இருப்பதனாலாகும். விவசாயிகள் உரத்தின் விலையை அதிகரித்தமையின் காரணமாக முகங்கொடுக்க வேண்டியேற்பட்ட நெருக்கடிகளை இதன் மூலம் தடுக்கக் கூடியதாக இருந்தது. 2020 ஆம் ஆண்டிலிருந்து சுற்றுச் சூழலுக்கும் மற்றும் சமூகத்துக்கும் நட்புறவான விவசாய உள்ளீடுகளையும் மற்றும் பயன்பாடுகளையும் அறிமுகப்படுத்துவதன் மூலம் பாதகமான இரசாயன பொருட்கள் உள்ளடங்காத ஆரோக்கியமான உணவு வேளையொன்றை நுகர்வதற்கான வாய்ப்பினை விரிவாக்குவதன் மூலம் இலங்கையின் விவசாய நடைமுறைகளின் பயன்பாடுகளை படிப்படியாக சேதன உரப் பாவனையில் ஈடுபடுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகள் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டன. இப்புதிய திட்டத்தின் கீழ் சேதன மற்றும் அசேதன உரங்களை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதோடு, படிப்படியாக விவசாயியை சேதன உரப் பாவனையினை ஊக்குவிப்பதற்கும் இரசாயன உரப் பாவனையிலிருந்து வெளியேற்றுவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அரிசியானது இந்நாட்டின் பிரதான உணவாக விளங்குவதோடு, உணவுப் பாதுகாப்பு, மற்றும் போஷாக்கு மட்டத்தை உறுதிப்படுத்தும் பிரதான காரணியாகவும் விளங்குகின்றது. அதன் படி, விவசாயிகளின் அறுவடைகளுக்கு நியாயமான விலையொன்றினை வழங்குவதற்கும், அரிசியின் விலையை உறுதியாக வைத்திருப்பதன் மூலம் நுகர்வோரையும் பாதுகாக்கும் நோக்குடன் 2019 ஆம் ஆண்டில், அரசாங்கத்தின் நெல் கொள்வனவு செய்யும் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதற்கு ஏற்ப, மாவட்டச் செயலாளர்கள் / அரவாங்க அதிபர்கள் மூலம் 2019 ஆம் ஆண்டில் ரூபா 1,886 மில்லியன் திறைசேரி நிதியைப் பன்படுத்துவதன் மூலம் 48,271 மெட்ரிக் தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டது.

அறுவடைக் காலத்தில் விவசாயிகளின் விவசாயப் பயிர்களின் பாதுகாப்பை பேணுவதன் மூலம் இடை வியாபாரிகளினால் விவசாய அறுவடைகளை குறைந்த விலைக்கு கொள்வனவு செய்வதனை தடுப்பதன் மூலம் விவசாயிகளின் வருவாளைய அதிகரிப்பதற்காக அரசாங்க நிர்வாகத்தின் கீழ் 6 களஞ்சியசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டன. இக்களஞ்சியசாலைகள், அனுராதபுரம், மொனராகலை, மன்னார், இரத்தினபுரி, கிளிநொச்சி, மற்றும் பொலன்னறுவை

மாவட்டங்களில் ஸ்தாபிக்கப்பட்டன. இக்களஞ்சியசாலைக் கட்டடத் தொகுதிகளில் தானியங்களை உலற வைத்தல், சுத்தப்படுத்தல், ஆய்வு கூடத்தில் விதைளை பரிசோதனை செய்தல், மற்றும் நவீன தொழில்நுட்பங்களுக்கு ஏற்ற வகையில் களஞ்சியப்படுத்த முடியும். இந்த வகையில் தமது விவசாய அறுவடைகளை இக்களங்சியசாலைக்குள் வைத்திருந்து சந்தையில் விலை உயர்வடைந்ததன் பின்னர் விற்பனை செய்வதன் மூலம் விவசாயிகள் உயர்வான வருமானத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். இக்களஞ்சிய கட்டடத் தொகுதிக்குள் நெல், சோளம், சோயா அவரை, எள்ளு, உழுந்து, மிளகு, மற்றும் வேர்க்கடலை போன்ற தானிய வகைகளை களஞ்சியப்படுத்தி வைக்கக் கூடியதாக உள்ளதோடு, கிட்டத்தட்ட 48,000 மெட்ரிக் தொன் களஞ்சியப்படுத்தக் கூடிய கொள்ளளவைக் கொண்டுள்ளது. இத்தானியக் களஞ்சியத்தை ஸ்தாபித்ததன் பின்னர் இது வரை விவசாயிகளினால் ரூபா 68.7 மில்லியன் அளவிலான வருமான உயர்வொன்றை உழைக்கக் கூடியதாக இருந்தது.

சகலருக்கும் தரமான கல்வியொன்றை வழங்கும் குறிக்கோளுடன் வட்டி மானிய நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. சிங்கித்தி பாசல, ரெக்கவரண, என்பன வட்டி மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டன. அதன் படி, பால் நிலை வேறுபாடுகளின்றி சகலருக்கும் தரமான கல்வியொன்றை வழங்குவதனை உறதிப்படுத்துவதற்காக உயர் கல்விக்கு அவசியமான நிதி வசதிகளற்ற பல சிறுவர்களுக்கு அதற்கு அவசியமான நிதி வசதிகள் வழங்கப்பட்டன. அவ்வாறு உயர் கல்வியைப் பெற்றுக் கொண்டதன் பின்னர், அரசாங்கத் தொழிலொன்றில் தங்கியிருப்பதற்குப் பதிலாக தனது சொந்த முயற்சியில் முன்னேற விரும்பும் இளம் தொழில்முயற்சியாளர்களை உருவாக்குவதற்கு அவசியமான கடன் வசதிகளை எரம்பம நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டது. அதன் படி, 2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் இக்கடன் திட்டத்தின் கீழ் 975 பயனாளிகளுக்கிடையில் ரூபா 989 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.

பெண் தொழில்முயற்சியாளர்களை வலுப்படுத்தும் நோக்குடன் ‘‘பெண்களுக்கான தொழில் முயற்சி நிதி உதவித் திட்டம்’’, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிக் கடன் வரிசைத் நிகழ்ச்சித் திட்டம் (SMELoC) அறிமுகப்படுத்தப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2019ஆம் ஆண்டில், நாட்டின் மொத்த தொழிற்படையின் அதிகரிப்புக்கு நிகராக பெண் தொழிற்படையின் பங்கேற்பு விகிதம் அதிகரித்தாலும் கூட, இன்னும் உலகம் பூராவும் பெண், ஆண் தொழிற்படை பங்கேற்பில் இடைவெளியொன்று இருக்கும் 20 நாடுகளுக்குள் இலங்கையும் உள்ளடங்குகின்றது. எனவே, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் கடன் திட்டத்தின் கீழ் பெண் தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்காக அவர்கள் தமது வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கும், மற்றும் தொழில்முயற்சிகளை விருத்தி செய்வதற்கும் பெற்றுக் கொள்ளும் கடன் தொகையில் 20 சதவீத தொகையை மீளச் செலுத்தாத நன்கொடையாக வழங்கப்பட்டது. பின் தங்கிய பிரதேசங்களான வடக்கு, கிழக்கு, ஊவா, மற்றும் சப்ரகமுவா ஆகிய மாகாணங்களில் பெண் தொழில்முயற்சியாளர்களினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் தொகைக்கான நன்கொடை 25

சதவீதமாகும். ஆசிய அபிவிருத்தி வங்கியின் பயிற்சியைப் பெற்றுக் கொண்ட தொழில் முயற்சியாளர்களுக்கு 30 சதவீத நன்பொடையொன்றும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் பயிற்சியைப் பெற்றுக் கொணட் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு கடன் நன்கொடை 35 சதவீதமாகும். அதன் படி, 2019ஆம் ஆண்டின் பின்னர் இந்நிகழ்ச்சிட்டத்தின் கீழ் 313 பயனாளிகளுக்கிடையில் ரூபா 613 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.

உலகளாவிய மின்வலு நுகர்வின் போக்கின் படி, புதைபடிவ எரிபொருளுக்குப் பதிலாக குறைந்த செலவில் சுற்றுச் சூழலுக்கு நட்புறவான புத்துயிராக்கமுள்ள மின்வலு மூலங்களை பயன்படுத்துவதனை ஊக்குவிப்பதற்காக ரிவி பல சவி கடன் திட்டமும், மற்றம் கட்டடங்களின் மீது பொருத்தப்படும் சூரிய சக்தி உருவாக்க கடன் வரிசைத் திட்டம் நடமறைப்படுத்தப்பட்டது. அதன் மூலம், முடியுமான சகல வதிவிடங்களிலும் மற்றும் வர்த்தகக் கட்டயங்களினதும் கூரைகளில் சூரிய சக்தி உருவாக்க முறைமையைப் பொருத்துவதன் ஊடாக 2020 ஆம் ஆண்டளவில் 200 மெகா வோட்களம், 2025ஆம் ஆண்டளவில் 1,000 மெகா வோட்களும் தேசிய மின்சக்தி வழங்கலுடன் சேர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இக்கடன் திட்டங்கள் இரண்டின் கீழும் 1,473 பயனாளிகளக்கு ரூபா 1,906 மில்லியன் கடன் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் பல நிகழ்ச்சித் திட்டங்கள் மக்களின் பங்கேற்புடன் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களாகும். நாட்டில் நிலவும் சிக்கலான வரிக் கொள்கைகள், நெகிழ்வற்ற வங்கிச் சட்ட திட்டங்கள், நிபந்தனைகள், வங்கிகள் தமது பாரம்பரிய கடன்படுவோருக்கு கடன் வழங்குவதற்குக் காட்டும் அதிக விருப்பம், அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்படும் வசதிகள் தொடர்பாக மக்கள் ஒழுங்கான முறையில் விழிப்பூட்டப்படாமை, மக்கள் நெகிழ்ச்சிக்கு காட்டும் விருப்பற்ற தன்மை, போன்ற தடைகளை குறைப்பதன் மூலம் இந்நிகழ்ச்சித் திட்டங்களில் அதிக பட்ச பயன்களை மக்களுக்கு வழங்க முடியும்.

**அத்தியாயம் 06 – மனித வள விபரம்**

## 6.1 பதவியணி முகாமைத்துவம்

| | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | தற்போதுள்ள பதவியணி | புதவி வெற்றிடம் / (அதிகப்படியான )** |
|---|---|---|---|
| சிரேஷ்ட | 19 | 18 | 1 |
| மூன்றாம் நிலை | 15 | 15 | 0 |
| இரண்டாம் நிலை | 0 | 0 | 0 |
| ஆரம்ப நிலை | 12 | 12 | 0 |

**06.2** **பதவியணி பற்றாக்குறையான அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவன செலாற்றுகையினை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுக

## 06.3 மனித வள அபிவிருத்தி

| நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர் | புயிற்ற ப்பட்ட பதவிய ினர் எண்ண ிக்கை | நிகழ்ச்சி த் திட்டக் காலம் | மொத்த முதலீடு (ரூபா ’000) | | நிகழ்ச்சித் திட்டத்தின் இயல்பு (உள்நாட்டு / வெளிநாட்டு ) | வெளியீடு/ பெற்றுக் கொண்ட அறிவு* |
|---|---|---|---|---|---|---|
| | | | உள்நாட்டு | வெளிநாட்டு | | |
| வெற்றிகரமான கருத்திட்ட வடிவமைப்பு மற்றும் அமுலாக்கல் தொடர்பான ஐந்தாம் மன்றம் | 1 | 3 நாட்கள் | 86.3 | | வெளிநாடு | புதிய கருத்திட்ட தொழில்நுட்பங்கள் தொடர்பான அறிவினை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்றுக் கொண்டதோடு, ஏனைய பங்கேற்பு நாடுகளுடன் கருத்திட்ட அனுபவங்களை பகிர்ந்து கொள்ளல் |
| ஜீ 20 தலைவர்களின் | 1 | 2 நாட்கள் | 50.4 | | வெளிநாடு | பொருளாதார நடவடிக்கைகளுக்கான பெண்களின் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாநாடு | | | | | | பங்கேற்பினை மேம்படுத்துவதற்கான புதிய முயற்சிகளை தலைவர்கள் கலந்துரையாடியதோடு, பல்வேறுபட்ட நாடுகளின் அனுபவங்கள் கலந்துரையாடப்பட்டன. |
| 3 ஆம் ஆசிய நிதி மன்றம் :உள்ளடக்க நிதியின் எதிர்காலம் | 1 | 2 நாட்கள் | 109.6 | | வெளிநாடு | நிதிச் சேவைகளைச் சுற்றியுள்ள தலைப்புகள் பற்றிய நுண்ணறிவு , அறிவு மற்றும் மாற்றுக் கடன் மதிப்பெண், மத்திய வங்கி , டிஜிட்டல் நாணயம், மற்றும் இணைய பாதுகப்பு போன்ற தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் |
| சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட நுண்கடன் மற்றும் தன்னிறைவுப் பொருளாதார அபிவிருத்தி | 1 | 13 நாட்கள் | 113.4 | | வெளிநாடு | பங்கேற்பு நாடுகளுடன் அறிவையும் மற்றும் அனுபவத்தையும் பகிர்ந்து கொள்வதற்கான தாய்லாந்தின் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட நுண்கடன் மற்றும் தன்னிறைவுப் பொருளாதார |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | அபிவிருத்தி தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் |
| பொதுப் பெறுகையும் மற்றும் ஒப்பந்த நிர்வாகமும் தொடர்பான டிப்ளோமா | 2 | 11 நாட்கள் | 1,851 | | வெளிநாடு | மலேசியாவின் கூட்டுறவு நுண்கடன் நடைமுறைகளை இலங்கையின் நுண்நிதித் துறையை வலுப்படுத்துவதற்கு எவ்வாறு வினைத்திறனாகப் பயன்படுத்தலாம் என்பது தொடர்பான அறிவை விருத்தி செய்தல். |
| இணைந்த நுண்நிதித் துறை | 1 | 11 நாட்கள் | 80.4 | | வெளிநாடு | மலேசியாவில் எவ்வாறு இணைந்த நுண்நிதித்துறை பயன்படுத்தப்படுகின்றது என்பதனை இலங்கையின் நுண்நிதித்றையை கட்டியெழுப்புவதற்காக பயன்படுத்தல் |
| சாரதிகளுக்கான ஒழுக்கம் மற்றும் அலுவலக நெறிமுறைகள் | 2 | 2 நாட்கள் | 17.0 | | உள்நாடு | நெறிமுறையுடனும், ஒழுக்கத்துடனும் அலுவலகர்களுடன் எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பான அறிவை சாரதிகள் பெற்றக் கொண்டனர். |
| MS-EXCEL தொடர்பா | 3 | 2 நாட்கள் | இலவசம் | | உள்நாடு | கணக்கியல் நடவடிக்கைகள் தொடர்பான |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ன உயர்வான திறன் | | | | | | அடிப்படை தகவல்களை ஒரே தாளில் வைத்திருப்பது எவ்வாறு? அதன் மூலம் தகவல்களை உடனடியாக பெற்றுக் கொள்வதற்கும், மற்றும் தேவையான போது தேவைக்கேற்ற படி அவற்றைத் தயாரித்தல், கணக்குகளை சுருக்குதல், மற்றும் நிதி எதிர்வு கூறல் தொடர்பான அறிவை பெற்றுக் கொண்டனர் . |
| அரசாங்க சேவையின் சம்பள மாற்றம் | 2 | 2 நாட்கள் | 37.50 | | உள்நாடு | சம்பள மாற்ற சுற்றறிக்கையை கற்பதற்கான விஷேட வாய்ப்பொன்று கிடைக்கப் பெற்றதோடு, அதனை திணைக்களத்தின் அலுவலர்களின் சம்பளங்களை தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது . |
| அரசாங்க பெறுகை செயற்பாடு | 1 | 2 நாட்கள் | | | உள்நாடு | தற்போதைய பெறுகை செயன்முறைகளை |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தொடர்பான பிற்சி நிகழ்ச்சித திட்டங்கள் | | | | | | யும் சட்ட திட்டங்களயும் அன்றாட அலுவலக நடவடிக்கைகளில் பயன்படுத்துவது எவ்வாறு என்பது தொடர்பான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது. |
| ஒழுங்கான முறையில் அலுவலக கடிதங்களை எழுதுதல் | 1 | ஒரு நாள | இலவசம் | | உள்நாடு | ஒழுங்காக கடிதமொன்றை உரிய முறையில் எழுதுவதற்கு இப்பயிற்சி நிகழ்ச்சத் திட்டம் மிகவும் பயனளிக்கக் கூடியதாக இருந்தது. |

* *நிறுவனத்தின் செயலாற்றுகைக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் எவ்வாறு பங்களிக்கிறன என்பதை சுருக்கமாக விளக்குக.*

**அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை**

| இல. | ஏற்புடைய தேவைப்பாடு | இணக்கப்பாட்டு நிலைமை(இணக்கமானது/ இணக்கமற்றது) | இணக்கமற்றதாயின் அதைப்பற்றி சுருக்கமாக விபரிக்க | எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கை யாது? |
|---|---|---|---|---|
| **1** | **பின்வரும் நிதி அறிக்கைகள் /கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.** | | | |
| 1.1 | வருடாந்த நிதி அறிக்கைகள் | இணக்கமானது | | |
| 1.2 | அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கு | இணக்கமானது | | |
| 1.3 | வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள் ) | பொருத்தமற்றது | | |
| 1.4 | களஞ்சிய முற்பணக் கணக்கு | இணக்கமானது | | |
| 1.5 | சிறப்பு முற்பணக் கணக்கு | இணக்கமானது | | |
| 1.6 | ஏனைய | இணக்கமானது | | |
| **2** | **புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி. 445)** | | | |
| 2.1 | பொது நிர்வாக சுற்றறிக்கை 267/*2018* இன் படி நிலையான சொத்து பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.2 | ஆள்சார் வேதனாதிகள் பதிவு / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.3 | கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.4 | உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.5 | அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் *(CIGAS)* தயார் செய்து பொதுதிறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 2.6 | காசோலை மற்றும் காசுக்கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.7 | பொருட் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 2.8 | இருப்புப் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.9 | இழப்புப் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.10 | பொறுப்பு பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 2.11 | அடிக்கட்டை புத்தகங்களின் *(GA – N20)* பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| **3** | **நிதிக்கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி. 135)** | | | |
| 3.1 | நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன | இணக்கமானது | | |
| 3.2 | நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றிநிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது | இணக்கமானது | | |
| 3.3 | ஓவ்வொரு கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லதுஅதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது. | இணக்கமானது | | |
| 3.4 | 2014.05.11 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல. 171/2004 இன் படி, அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை. | இணக்கமானது | | |
| **4** | **வருடாந்த திட்டத்தினைத் தயாரித்தல்** | | | |
| 4.1 | வருடாந்த செயற்பாட்டு திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.2 | வருடாந்த கொள்முதல் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.3 | வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 4.4 | வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வ.செ.தி திணைக்களத்தில் *(NBD)* உரிய திகதியில் சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 4.5 | வருடாந்த காசுப்பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **5** | **கணக்காய்வு வினாக்கள்** | | | |
| 5.1 | அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது. | இணக்கமானது | | |
| **6** | **உள்ளகக் கணக்காய்வு** | | | |
| 6.1 | நி.பி. 134 (2) டி.எம்.ஏ. / 1-2019 படி, ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளகக் கணக்காய்வு திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 6.2 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல் | இணக்கமானது | | |
| 6.3 | அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40 (4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 6.4 | அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134 (3) நிதி பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு வழங்குதல். | இணக்கமானது | | |
| **7** | **கணக்காய்வு மற்றும் முகாமைத்துக் குழு** | | | |
| 7.1 | டி.எம்.ஏ 1- 2019 சுற்றறிக்கையின் படி ஆண்டுக்கு குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |
| **8** | **ஆதன முகாமைத்துவம்** | | | |
| 8.1 | ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல 01/ 2017 ,சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். | இணக்கமானது | | |
| 8.2 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 அத்தியாயத்தின் படி, சுற்றறிக்கையின் விதிகளை | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | அமுல்படுத்துவதற்கும், அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமாதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார். | | | |
| 8.3 | அரச நிதி சுற்றறிக்கையின் இல 05/2016 பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |
| 8.4 | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |
| 8.5 | நி.பி. 772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம் பெற்றது | இணக்கமானது | | |
| **9** | **வாகன முகாமைத்துவம்** | | | |
| 9.1 | குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| 9.2 | கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் ஆறு மாதங்களுக்குள் அகற்றப்படுத்ல வேண்டும். | பொருத்தமற்றது | | |
| 9.3 | வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும். | இணக்கமானது | | |
| 9.4 | ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி. 103,104,109 மற்றும் 110 இன் படி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | இணக்கமானது | | |
| 9.5 | 2016.12.29 ஆம் .12.2 9பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 2016 / 30 இன் விதிகளின் படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல். | இணக்கமானது | | |
| 9.6 | குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும். | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| **10** | **வங்கிக் கணக்குகளின் முகாமை** | | | |
| 10.1 | உரிய திகதிகளில் வங்கிக் கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| 10.2 | மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளைத் தீர்யாரித்தல் | இணக்கமானது | | |
| 10.3 | வங்கிக் கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளைத் தீர்த்தல். | இணக்கமானது | | |
| **11** | **நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்** | | | |
| 11.1 | ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாத படி செலவிடல். | இணக்கமானது | | |
| 11.2 | நி.பி.94 (1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும். | இணக்கமானது | | |
| **12** | **அரச அலுவலர்களின் முற்பணக்கணக்கு** | | | |
| 12.1 | எல்லைகளுக்கு இணங்குதல். | இணக்கமானது | | |
| 12.2 | நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திருத்தல் | இணக்கமானது | | |
| 12.3 | ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல் | இணக்கமானது | | |
| **13** | **பொது வைப்புக் கணக்கு** | | | |
| 13.1 | காலம் பிந்திய வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி. 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் | இணக்கமானது | | |
| 13.2 | பொது வைப்புக்களுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் | இணக்கமானது | | |
| **14** | **முற்பணக் கணக்கு** | | | |
| 14.1 | மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைதிறைசெரி செயற்பாட்டு திணைக்களத்துக்கு | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | அனுப்பப்பட்டுள்ளது. | | | |
| 14.2 | நி.பி. 371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல்,அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும். | இணக்கமானது | | |
| 14.3 | நி.பி. 371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல் | இணக்கமானது | | |
| 14.4 | மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுத்தல் வேண்டும். | இணக்கமானது | | |
| **15** | **வருமானக் கணக்கு** | | | |
| 15.1 | விதிகளின் படி சேர்க்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும். | இணக்கமானது | | |
| 15.2 | திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும். | இணக்கமானது | | |
| 15.3 | நி.பி. 176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்துக்குச் சமர்ப்பித்தல். | இணக்கமானது | | |
| **16** | **மனித வள முகாமைத்துவம்** | | | |
| 16.1 | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல் | இணக்கமானது | | |
| 16.2 | ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல். | இணக்கமானது | | |
| 16.3 | 20.09.2017 தேதியிட்ட எம்.எஸ்.டி சுற்றறிக்கை இல. 04/ 2017 இன் படி அனைத்து அறிக்கைகளும்முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | இணக்கமானது | | |
| **17** | **பொது மக்களுக்கான தகவல் வழங்கல்** | | | |
| 17.1 | தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்கு முறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்தல் | இணக்கமானது | | |
| 17.2 | அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | கருத்துகள் / குற்றச்சாட்டுகளை எளிதாக்குதல். | | | |
| 17.3 | தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 8 மற்றும் 10 பிரிவுகளின் படிஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல் | இணக்கமானது | | |
| **18** | **பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்** | | | |
| 18.1 | பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல: 05/ 2008 மற்றும் 05/ 2018 (1) இன் படி பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல். | இணக்கமானது | | |
| 18.2 | சுற்றறிக்கையின் பந்தி 2.3 ஐப் பொறுத்த வரை பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது. | இணக்கமானது | | |
| **19** | **மனித வள திட்டத்தினைத் தயாரித்தல்** | | | |
| 19.1 | 2018.01.24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 02 /2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல் | இணக்கமானது | | |
| 19.2 | ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்த பட்சம் 12 மணி நேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வள திட்டம் உறுதி செய்ய வேண்டும். | இணக்கமானது | | |
| 19.3 | மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. | இணக்கமானது | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 19.4 | மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 வது பந்திக்கு ஏற்ப மனித வள மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல். | இணக்கமானது | | |
| **20** | **கணக்காய்வு பதிவுகளுக்கான பொறுப்புகள்** | | | |
| 20.1 | முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு பத்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளைச் சரி செய்தல். | இணக்கமானது | | |